# கலித்தொகையில் காணலாகும் பண்பாடு

**முனைவர் ந.சுதா**
**உதவிப்பேராசிரியர்**
**பாரத் அறிவியல் மற்றும் நிர்வாகவியல் கல்லூரி**
Mail Id:sutharamya66@gmail.com

**51**

**முன்னுரை**

மனிதன் தோன்றிய நாள் முதலே நாகரீகமும் தோன்றியது. மனிதன் அறிவு வளர்ச்சியை பெற்ற போது நாகரீகமும், பண்பாடும் வளர்ச்சி பெற்றது. நாகரீகமும், பண்பாடும் காலத்திற்கேற்ப மாற்றம் பெறக்கூடியது. “கற்றறிந்தோர் ஏத்தும் கலி” “கல்விவலார் கண்ட கலி” என்று போற்றப்படும் நூல் கலித்தொகை ஆகும். தமிழர்கள் பண்பாட்டை எடுத்துரைப்பன உள்ளுறை, இறைச்சி ஆகியனவாகும். இலக்கியம் என்பது மனிதனை பண்படுத்தும் விதமாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**பண்பு என்பதன் பொருள்**

“பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்”

எனக் கூறும் இலக்கியம் கலித்தொகை. பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் நாடக பாங்கில் நவிலும் பண்டைய இலக்கியம் இதுவாகும். உலக ஒழுக்கம் என்பது எவ்வாறு உள்ளதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுதலே பண்பாடு என்பதை வலியுறுத்தும் இலக்கியமாகும்.

பாலைக்கலியில் இடம்பெறும் ஒரு பாடலில் தலைவனும், தலைவியும் உடன்போக்கு மேற்கொண்டனர். அவர்களை செவிலித்தாய் தேடிச் சென்றனள். வழியிடை முக்கோற் பகவரைக் கண்டு தன் மகள் குறித்த செய்தியை வினவ அவர்கள் அதற்கு பதில் அவர்களோ கண்டோம்! ஆனால் கலங்க வேண்டாம் இது உலக ஒழுக்கமே எனக் கூறும்போது சில உவமைகளை கூறி ஆறுதல்படுத்துகின்றனர்.

“பலஉறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்?
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும் ?
ஏழ்புணர் இன்இசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும் ?
(பாலைக்கலி – 9)

சந்தனம், முத்து. யாழ் இவை பிறந்த இடத்திற்கு எந்தப் பயனும் தராது. அவற்றை யார் பயன்படுத்துகின்றார்களோ அவர்களுக்கே அது பயன்படும். அதுபோலவே பெண்ணும். இதனை நினைத்து தேறி உணர்வாய் என ஆறுதல்படுத்தல் விதமாக அமைந்துள்ளது இப்பாடல். இதனையே

திருக்குறளும்

"அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" (திருக்குறள் - அறம் - 49)

என அறனை இல்வாழ்க்கையுள் வலியுறுத்துகிறது.

**'அன்பு' எனப்படுவது தன்கிளை செறாமை**

பாலைக்கலி பாடலில் மற்றொன்று வேனிற்கால வருணனைக் குறித்துக் கூறுகையில்,

"வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்
சிறியவன் செல்வம்போல், சேர்ந்தார்க்கு நிழல்இன்றி
யார் கண்ணும் இகந்து செய்து இசைகெட்டான் இறுதிபோல்"

(பாலைக்கலி 10)

வேனிற்கால மரங்கள் குறித்துக் கூறும்போது இளமையிலேயே வறுமையுற்றவன் போல தளிர்கள் வாடிய கொம்புகளை உடையனவாய் நின்றன. கொடுத்தற்கு மனம் சிறிதாக உடைய ஒருவனது செல்வம், தன்னை சேர்ந்தவர்களுக்கு பயன்படாததுப் போல தன்னை சேர்ந்தவர்களுக்கு நிழலின்றி இருந்ததாக பாடல் கூறுகிறது. மேலும் அனைவரிடத்தும் ஒழுக்கத்தை கடந்து தீமை செய்பவன் இறுதி காலத்தில் புகழ் கெட்டு, அவனுடைய சுற்றத்தாரும் கெடுவர். மரத்தின் கிளைமட்டும் அல்லாது வேரும் வெம்பும் பாலைநிலக் காட்டுக்கு உதாரணமாகக் கூறப்பட்டது.

**புராணம் மற்றும் இதிகாசங்களில் இடம்பெறும் செய்திகள்**

"இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமை அமர்ந்து உயர்மலை இருந்தனனாக
ஐ-இரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுந்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல"
(குறிஞ்சிக்கலி -38)

இமய மலையை வில்லாக வளைத்தவன். கங்கையின் ஈரத்தை உடைய சடா முடியினை உடைய சிவபெருமான். இறைவியாகிய உமையம்மையுடன் உயர்ந்த இமயமலையில் இருந்தான். இருந்தபொழுது பத்துத் தலைகளை உடைய அரக்கர் தலைவனாகிய இராவணன் இமய மலையை எடுப்பதற்காக கைகளை கீழே செருகி, அம்மலையை எடுக்கலாற்றாது வருந்தியது போல, வேங்கை மரத்தை புலியெனக் கருதிய மதயானை, மரத்தின் அடிப்பகுதியை குத்தி தன் கொம்பை வாங்க இயலா நிலையை உதாரணப்படுத்தி இப்பாடல் அமைந்துள்ளது.

**மகாபாரதச் செய்தி இடம்பெறுதல்**

நூற்றுவர்க்கு தலைவனான துரியோதனன் தொடையிலே அடித்து உயிரைப் போக்கினன் பீமசேனன். அதுபோல புலியை அடித்துக் கொன்ற யானையினது செய்தியை குறிஞ்சிக்கலி பாடல் கூறுகிறது.

“முறம் செவி மறைப் பாய்பு முரண் செய்த புலிசெற்று
மறம் தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கு அறுத்திடுவான் போல், கூர்நுதிமடுத்து, அதன்
நிறம் சாடி முரண் தீர்த்த நீள்மருப்பு எழில்யானை
மல்லரை மறம் சாய்த்த மால்போல்”
(குறிஞ்சிக் கலி - 52)

**தை நீராடல் செய்தி**

பிற்கால இலக்கிய வளர்ச்சியில் ஆண்டாள் பாடிய மார்கழி நீராடல் என்னும் நிகழ்வு கலித்தொகையில் தைநீராடல் எனக் குறிப்பிடப்படுகிறது. தைத்திங்கள் நீராடிய பயன்பெற வேண்டுவதாக.

“பொய்தல மகளையாய் பிறர்மனைப்பாடி நீ
எய்திய பலர்க்கு ஈத்த பயம் பயக்கிற்பதோ”
“சிறுமுத்தனைப் பேணி சிறு சோறுமடுத்து நீ
நறு நுதலவரொடு நக்க துநன்கு இயைவதோ”
“செய்ததன் பயம் பற்றுவிடாது
நயம் பற்று விடின் இல்லை நசையோர் திறத்தே”
(குறிஞ்சிக்கலி – 59)

இதனையே பரிபாடலில்

தையில் நீராடிய தவந்தலைப்படுவாயோ – தாய்
அருகா நின்று தவத்தை நீராடுதல் (பரி.11.91)

என்று தைநீராடல் தவம் போன்ற செயல் கூறுகிறது. ஐங்குநுறூற்றிலும் தைநீராடல் குறித்த செய்தி இடம்பெற்றுள்ளது.

**திருமணத்திற்கு நல்ல நாள் குறித்தச் செய்தி**

தந்தை வரைவு உடன்பட்ட செய்தியை தலைவிக்குத் தோழி அறிவுறுத்தும் வழியில்,

தலைவியும் தோழியும் வள்ளைப்பாட்டுப் பாடினமையால் மறைந்து நின்று கேட்ட தலைவனும் வந்தான். மேலும் தலைவியின் தந்தையும் வரைவுக்கு உடன்பட்டனன்

“நன்று ஆகின்றாள் தோழி நம் வள்ளையுள்
ஒன்றி நாம் பாட, மறைநின்று கேட்டு அருள
மென்தோட் கிழவனும் வந்தான்; நுந்தையும்
மன்றல் வேங்கைக் கீழ்இருந்து
மணம் நயந்தனன் அம்மலை கிழவோர்க்கே”
(குறிஞ்சிக்கலி – 41)

**தலைவன் தன் காதலை உணர்த்தும் தன்மை**

சிறுவயதில் ஒன்றாக விளையாடிய ஒருவன் தன் காதலை வெளிப்படுத்த தலைவியின் இல்லம் தேடிச் சென்ற பாண்மையை குறிஞ்சிக்கலி ஐம்பது ஒன்றாவது கூறுகிறது.

**தோழி அறத்தோடு நிற்றல்**

“தலைவி பாங்கிக் கறத்தோடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தோடு நிற்கும்
செவிலி நற்றாய்க் கறத்தோடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தோடு
நிற்கும் என்ப நெறியுணர்ந்தோரே” **(தொல்-களவு-212)**

தலைவி தோழியிடம் அறத்தொடு நிற்குமாறு வேண்டல் குறித்த பாடல் குறிஞ்சிக்கலியில் உள்ளது. இது தமிழர் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிகழ்வு ஆகும். வேற்று மணம் நிகழாதவாறு தோழி அறத்தோடு நிற்றல், தலைவனோடு தான் கூடிய கூட்டம் இத்தன்மையது என எடுத்துக்கூறி தோழியிடம் வேண்டும்போது

தோழி ! நம்நகர்
அருங்கடி நீவாமை கூறின், நன்று என
நின்னொடு சூழ்வல், தோழி!

(குறிஞ்சிக்கலி – 54)

என்ற குறிஞ்சிக்கலிப்பாடல் வரிகளில் தோழி அறத்தொடு நிற்கும் திறத்தை காண முடிகிறது.

**முடிவுரை**

மனிதன் வாழ்வு துவங்கும்போது ஏற்படும் கலாச்சாரம், பண்பாடு, சமய சடங்குகள் ஆகியவை அவன் வாழ்வின் இறுதிவரை அவன் ஊடே பயணிக்கின்றன. கால மாற்றத்தின் காரணமாக ஏற்ற இறக்கங்கள் இருக்கலாமே தவிர எதுவும் புதிதாக துவங்கப்படுவதில்லை என்பதனையே இக்கட்டுரை உணர்த்துகின்றது.

**மேற்கோள் நூல்கள்**

காலந்தோறும் தமிழர் நாகரிகமும் பண்பாடும் - செம்மூதாய் பதிப்பகம்